**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.253/2020** **தேதி.**12.01.2026

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 12.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| பெயர் | | திரு.வேதாத்ரி |
| த/பெ. | | திரு.தாமோதரராவ் |
| வயது | | 61/2026 |

துவக்க நேரம் 12.43 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

1. பாஸ்கர ராவ்விற்கும், தாமோதரராவிற்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக நான் இந்த வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு, எனது தந்தை செட்டில்மெண்ட் கொடுத்த ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு வாய்மொழி பாகமாக வந்த சொத்தை எனக்கு, செட்டில்மெண்ட் கொடுப்பதாக வாசகம் உள்ளதா என்றால், இல்லை. எதற்காக அந்த வாசகத்தை குறிப்பிடவில்லை என்றால் எனது அப்பா பெயரில் தனியாக பட்டா வந்துவிட்டது. அதனால் வாய்மொழி பாகமாக சொத்து வந்தது என்பதை குறிப்பிட்டு எழுதவேண்டிய அவசியமில்லை.

2. உண்மையில் எனது அப்பாவிற்கு வாய்மொழி பாகமாக தாவா சொத்து வந்திருந்தால், எனக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில், எனது தகப்பனாருக்கு வாய்மொழி பாகமாக சொத்து வந்ததென குறிப்பிட்டு எழுதியிருப்பார் என்றாலும், எனது தகப்பனாருக்கு வாய்மொழியாக தாவா சொத்து பாகமாக கிடைக்கப்பெறாததால்தான் மேற்கண்ட வாகசத்தை குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரியல்ல.

3. என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள, தானசெட்டில்மெண்ட் பத்திரம் (பி.த.ச.ஆ.2) தாவா சொத்தை அபகரிப்பதற்காக, எங்களால் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி தாவா சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டதாக, நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து, பாஸ்கரராவ்விற்கு பாத்தியப்பட்டு, அவர் அனுபவித்து வந்து, கடந்த 22.03.1960ம் ஆண்டு, சுப்பாரெட்டி குமாரர் முனுசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்து தாவா சொத்தையும் சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார் என்றால், சரியல்ல. பாஸ்கரராவ் கிரையம் கொடுத்த சொத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை அது வேறு சொத்து, இது வேறு சொத்து. நான் வழக்கிற்காக இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான், 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகார பத்திரத்தில், தாவா சொத்திற்கான சக்குபந்தியில் தாவா சொத்தின் கிழக்கு திசையில், ஒரு கண்ணன் என்பவரின் நிலம் உள்ளதாக குறிப்பிட்டு சொத்து விவரத்தில் காட்டி பொதுஅதிகார பத்திரம் எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த நேரத்தில் ஆவணங்களின்படி கண்ணன் பெயர்தான் இருந்தது. அதனால் அவ்வாறு குறிப்பிட்டு எழுதிக்கொடுத்தோம்.

5. தாவா சொத்திற்கு, கிழக்கில், சுப்பாரெட்டி மகன் முனுசாமி என்பவருக்கு, நிலம் இருப்பதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அவ்வாறு தாவா சொத்திற்கு, கிழக்கில் உண்மையில் முனுசாமி என்பவருக்கு, நிலம் இருந்திருந்தால், நான் ஏற்படுத்திக்கொடுத்த பொதுஅதிகார பத்திரத்தில், தாவா சொத்தின் கிழக்கு திசையில், முனுசாமி நிலம் இருப்பதாக குறிப்பிட்டு எழுதிக்கொடுத்திருப்பேன் என்றாலும், ஆனால் ஒரு பொதுஅதிகார பத்திரத்தில், கண்ணன் என்பவரின் பெயர்தான் ஆவணங்களில் இருந்தது, அதனால் அவ்வாறு எழுதினேன்.

6. நான் தாக்கல் செய்துள்ள, தானசெட்டில்மெண்ட் பத்திரம், நடைமுறைக்கு வரவில்லை என்றாலும், சுவாதீன அனுபவம் ஒப்படைக்கவில்லை என்றாலும், நான் எப்பொழுதும் சுவாதீனம் எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. என் பெயருக்கு பட்டா வந்துவிட்டது. என் பெயருக்கு பட்டா வாங்குவதற்காக,

தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான், போலியாக தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

7. பாஸ்கரராவ், முனுசாமிக்கு கிரையம் கொடுத்த தேதியிலிருந்து முனுசாமியும், அவரது சகோதரர் கண்ணனும் கிரையம் பெற்ற நாள்முதல் சொத்தை 1961 வரை கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து வேறு, முனுசாமி, பாஸ்கரராவ்விடமிருந்து வாங்கிய சொத்து வேறு. முனுசாமி, கண்ணன் மற்றும் அவரது வகையராவை பினாங்கு(மலேசியா) குடும்பம் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான்.

8. சுப்பாரெட்டி என்பவர் மலேசியாவில் வசித்து வந்தார் என்றால் அதை தெரிந்துகொள்ள எனக்கு அவசியமில்லை, எனக்கு தெரியாது. சுப்பாரெட்டி மலேசியாவில் இருந்தபோது முனுசாமியும், கண்ணனும் மலேசியாவில் பிறந்தார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. முனுசாமியும், கண்ணனும் மலேசியாவில் கூட்டாக வேலை செய்து அதன்மூலம் வந்த வருமானத்தை வைத்து மலேசியாவிலும், கத்தாரிக்குப்பத்திலும், கூட்டாக சொத்துக்கை வாங்கினார்கள் என்றால் அதை தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை, அது பற்றி எனக்கு தெரியாது.

9. முனுசாமி என்பவர் அவரது குடும்பத்தில் மூத்தவர் என்பதால், கடந்த 1960ம் ஆண்டு முனுசாமி என்பவர் பெயரில் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால், சரியல்ல. அந்த சொத்து வேறு, தாவா சொத்து வேறு. தாவா சொத்து வேறு, முனுசாமி கிரையம் வாங்கிய சொத்து வேறு என்று நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 1961ல் முனுசாமியும், கண்ணனும் சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றாலும், தாவா சொத்தும், மற்றும் சில சொத்துக்களும் கண்ணன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும், முனுசாமிக்கு மலேசியாவில் உள்ள சொத்தை ஒதுக்கினார்கள் என்றாலும், இந்த விவரம் எனக்கு தெரியுமா என்றாலும் தாவா சொத்திற்கும், முனுசாமி பாஸ்கரராவ்விடம் வாங்கிய சொத்திற்கும் சம்பந்தமில்லை.

ஆவணங்கள் பரிசீலிக்கவேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கவேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :– ஒத்திவைக்கப்படுகிறது.

**OS.NO.253/2020**

முடிவு நேரம் 1.30 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.